



# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்


**தலைமைக் கழகம்**

**எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014**

**தொலைப்பேசி : 044 - 2848 1235**


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 27.11.2022

## தலைமைக் கழக அறிவிப்பு

**புரட்சித்தலைவி அம்மா அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாள்: கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்கள் மெரினா கடற்கரை அம்மா நினைவிடத்தில் டிசம்பர் 5ம் தேதி அஞ்சலி செலுத்துகிறார்கள்.**

தமிழ்நாட்டு மக்களின் மனங்களில் நிறைந்து வாழும் தங்கத்தாரகை, தமிழக மக்களின் நலன்களைக் காத்து நின்ற தனிப்பெரும் ஆளுமை, துணிவும், தெளிவும் நிறைந்த கம்பீரத் தாய் நம் **புரட்சித்தலைவி அம்மா அவர்கள்** நம்மை விட்டு மறைந்தாலும், எந்நாளும் ஒவ்வொரு கணமும் நமக்குள் இருந்து நம்மை வழி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் போற்றி வணங்கும் வகையில், அவர்களது நினைவு நாளான வருகிற **05.12.2022 திங்கள்கிழமை அன்று காலை 10 மணிக்கு கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன்** அவர்களின் தலைமையில் சென்னை அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலையிலிருந்து பேரணியாக சென்று, மெரினா கடற்கரையிலுள்ள **அம்மா அவர்களின் நினைவிடத்தில்** அஞ்சலி செலுத்தி உறுதிமொழி ஏற்கவிருக்கிறோம்.

இந்நிகழ்வில் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்டம்/வார்டு, ஊராட்சி, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் என அனைவரும் பங்கேற்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**